நாள் 16.10.2024

OS No.12/2019

**வா.சா.1 திரு.கரடிமுத்து முதலியார்**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு ஒன்றாவது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வழக்கு சொத்துக்களை சர்வேயர் மூலம் அளவீடு செய்துள்ளேன். நீங்கள் வழக்குரையில் சர்வேயர் மூலம் அளந்ததாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 வரைபடம் தாக்கல் செய்வதற்கான விபரங்களை நான்தான் வழக்கறிஞருக்கு சொன்னேன். மேற்படி வரைபடத்தில் I மற்றும் J என்ற புள்ளிக்கு வடக்குபுறம் நீங்கள் ஒரு கழிவறை கட்டியுள்ளீர்கள் என்றால் ஆமாம். அந்தப் பக்கம் முடுக்கு உள்ளது. அது யாருடைய பராமரிப்பிலும் இல்லை. அதில் நான் நான்கடி அளவில் கழிவறை கட்டியுள்ளேன். மேற்படி இடம் வழக்கு சொத்தின் ஒரு பகுதி என்றால் இல்லை. வரைபடத்தில் உள்ள A மற்றும் H பகுதியில் தென்வடல் அளவு எவ்வளவு எவ்வளவு என்றால் அதனை அளவு எவ்வளவு என்று அளவீடு செய்யவில்லை. சென்ட் விஸ்தீரணம் எவ்வளவு என்று தான் அளவீடு செய்யப்பட்டது. அது எவ்வளவு அடி அளவில் உள்ளது என உங்களால் சொல்ல முடியுமா என்றால் ஆவணத்தில் உள்ளவாறு தான் கொடுத்துள்ளேன். கிழமேல் அளவு A

முதல் B எவ்வளவு இருக்கும் என்றால் 11 அடி, 12 அடி போல் இருக்கும். சரியான அளவு உங்களுக்கு தெரியாது என்றால் ஏற்கனவே அளவீடு செய்தோம். ஆனால், தெரியவில்லை.

2. மேற்படி வரைபடத்தில் உள்ள புள்ளிகளுக்கு இடையேயான அளவு உங்களுக்கு தெரியாது என்றால் எனக்கு இடம் மட்டும் தான் தெரியும். J மற்றும் K புள்ளிகளுக்கு இடையேயான அளவை மட்டும் குறிப்பிட்டு, மற்ற அளவுகளை குறிப்பிடாததற்கு என்ன காரணம் என்றால் அவர்கள் எனது இடத்தை பிடித்ததால் தான் அதனை குறிப்பிட்டுள்ளேன். J, K புள்ளிகளுக்கு இடையேயான அளவுகளை காட்டுவதற்கான ஆவணங்களை நீங்கள் தாக்கல் செய்திருந்தால் சரியல்ல. மேற்படி புள்ளிகளுக்கு இடையான அளவுகளை காட்டுவதற்கான வருவாய் ஆவணங்களும், நீங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நீங்கள் வழக்குரையில் சொல்லியுள்ள விவரங்களுக்கு விரோதமாக தளத்தில் இருப்பதால்தான் அளவுகளை குறிப்பிட்டுச் சொல்ல முடியவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 பட்டாவில் உள்ள அளவுகள் சரிதான். மேற்படி அளவுகள் தான் புலவரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது என்றால் ஆமாம். ஸ்தலத்திலும் மேற்படி அளவில்தான் இடம் உள்ளது என்றால் ஆமாம். மேற்படி பட்டாவில் நான்கு சென்ட் இடத்திற்கும் குறைவாகத்தான் உள்ளது என்றால் ஆமாம். ஒன்றாவது தபசில் சொத்தில் அளவுகள் நான்கு சென்ட் என்று தான் நீங்கள்

கட்சி செய்கிறீர்கள் என்றால் ஆமாம். நீங்கள் குறிப்பிட்டுள்ள நான்கு சென்ட் என்பது ஆவணங்கள் மற்றும் ஸ்தலத்தில் உள்ள அளவுகளுக்கு விரோதமாக கட்சி செய்கிறீர்கள் என்றால் சரியல்ல.

3. வா.சா.ஆ.1 ஆவணம் எனது தாத்தா கரடிமுத்து பெயரில் உள்ள ஆவணம் ஆகும். மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தில் நான்கு சென்ட் என்று அளவு குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி ஆவணத்தில் சொத்துக்களின் தென்வடல் மற்றும் கிழமேல் அளவுகள் போடப்படவில்லை என்றால் ஆமாம். ஒன்றாவது அட்டவணை சொத்தை உங்கள் தாத்தா கரடி முத்து முதலியார் மட்டுமே அனுபவித்து வரும்போது அதில் கிழமேல் பாதை எதுவும் ஒதுக்க வேண்டியது இல்லை என்றால் சரிதான். அதனால், மேற்படி உங்கள் தாத்தா கரடிமுத்து முதலியார் கிழமேல் பாதை அமைத்ததாக நீங்கள் குறிப்பிட்டுள்ளது பொய்யானது என்றால் சரியல்ல. அதை தற்போது இரண்டு பாகமாக நாங்கள் பிரித்துள்ளதால், கிழமேல் பாதை உள்ளது. இரண்டாவது அட்டவணை பாதை என்று நீங்கள் குறிப்பிட்டுள்ளது, எப்போது ஏற்படுத்தப்பட்டது என்றால் நான் பிறப்பதற்கு முன்பே ஏற்படுத்தப்பட்டது. நான் பிறக்கும்போதே அது இருந்தது. (எனக்கு தற்போது 77 வயது ஆகிறது). மேற்படி கிழமேல் பாதை நீங்கள் குறிப்பிட்டுள்ள நான்கு சென்ட் இடத்திற்கு உட்பட்டதா அல்லது உட்படாததா என்றால் நாலு சென்ட் இடத்திற்கு உட்பட்டது தான். அதை எப்போது ஏற்படுத்தினீர்கள் என்றால் 25

வருடங்களுக்கு முன்பு ஏற்படுத்தினோம்.

4. மாசாணம் முதலியார் என்பவரிடமிருந்து இரண்டு செண்ட் இடத்தை உங்கள் மகன் கிரயம் பெற்ற பின்னர் தான் மேற்படி பாதை ஏற்படுத்தப்பட்டதா என்றால் ஆமாம். 07.08.1967 ஆம் தேதியிட்ட மாசாணம் முதலியார் பெயரில் உள்ள கிரைய ஆவணத்தை படித்து பார்த்துள்ளேன். அந்த ஆவணம் என் கைவசம் உள்ளது. மேற்படி ஆவணத்தில் இரண்டாவது வழக்குரை சொத்து பாதை குறிப்பிடவில்லை என்பதால், தான் அதனை நீங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். 18.10.2007 ஆம் ஆண்டு மாசாணம் முதலியார் என்பவரிடமிருந்து எனது மகன் கிரயம் பெற்ற ஆவணத்தையும் படித்துப் பார்த்துள்ளேன். அந்த ஆவணமும் கைவசம் உள்ளது. அதிலும் இரண்டாவது தபசில் பாதை துலங்காது. மேற்படி ஆவணத்தில் கிழமேல் தென்வடல் அளவுகள் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் உள்ளது. அதை பத்திரத்தில் பார்க்க வேண்டும். மேற்படி ஆவணங்களில் இந்த வழக்கில் நீங்கள் குறிப்பிட்டுள்ள சொத்து விவரத்திற்கு முரணாக அளவுகள் உள்ளதால் தான் அவற்றை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி 2007 ஆம் ஆண்டு ஆவணத்தின் அடிப்படையில் கிரயம் பெற்றவர்கள் தான் இந்த வழக்கின் இரண்டாவது மற்றும் மூன்றாவது பிரதிவாதிகள் என்றால் சரிதான். அவர்கள் எனது மகன் மற்றும் மருமகள் ஆவார்கள். அவர்களுக்கும், எனக்கும் எந்த

பிரச்சனையும் இல்லை.

5. நீங்களும், இரண்டாவது, மூன்றாவது பிரதிவாதிகளும் சேர்ந்து இந்த வழக்கை மோசடியாக தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. அதனால், ஒன்றாவது அட்டவணை முதல் சொத்து இரண்டு சென்ட் அளவுள்ள இடத்தில் இரண்டாவது மற்றும் மூன்றாவது பிரதிவாதிகளுக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரிதான். இந்த வழக்கில் ஒன்றாவது பிரதிவாதி என்ன எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என நான் படித்து பார்க்கவில்லை. வழக்கறிஞர் பார்த்தார். வழக்குரை ஒன்றாவது அட்டவணை முதல் சொத்தை (மேல் பக்கம் உள்ள சொத்து) உங்கள் தாத்தா உங்களுக்கு நன்கொடையாக கொடுத்துள்ளார் என்றால் ஆமாம். அதற்கு முன்பாகவே கீழ்ப்பக்கம் உள்ள இரண்டு சென்ட் இடத்தை உங்கள் சித்தப்பாவிற்கு உங்கள் தாத்தா கொடுத்துவிட்டார் என்றால் ஆமாம். மூன்றே முக்கால் (3-3/4) சென்ட் அளவுள்ள இடத்தில் ஏற்கனவே, உங்கள் சித்தப்பாவிற்கு இரண்டு சென்ட் அளவுள்ள இடத்தை கொடுத்த பின்னர், இரண்டு சென்ட் அளவுள்ள இடத்தை உங்களுக்கு உங்கள் தாத்தா கொடுத்திருக்க முடியாது என்றால் அந்த இடம் எவ்வளவு இருந்தாலும், கீழ்புறம் உள்ள இடம், மேல்புறம் உள்ள இடம் என்ற அடிப்படையில் தான் கணக்கில் வருகிறது. நீங்கள் குறிப்பிட்டுள்ள சொத்து விவரம் தவறானது என்றும், உங்களுக்கு

எந்த காலத்திலும் இரண்டு சென்ட் அளவுள்ள இடம் பாத்தியப்படவில்லை என்றால் சரியல்ல.

6. ஒன்றாவது பிரதிவாதி அவரது வீட்டிற்கு வடக்கு பக்கம் வாசல் மற்றும் ஜன்னல் தரைதளத்திலும், முதல் தளத்திலும் வைத்துள்ளார். ஒன்றாவது பிரதிவாதியின் வீட்டு சுவரில் இருந்து வடக்கில் நான்கு அடி தள்ளி கிழமேலாக ஹாலோ பிளாக் சுவர் உள்ளது என்றால் ஆமாம். அந்த சுவரை நான் தான் கட்டியுள்ளேன். அவர்கள் மூன்று அடி இடம் தான் விட்டுள்ளார்கள். இந்த வழக்கில் வழக்குரை மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் ஹாலோ பிளாக் சுவரை நீங்கள் கட்டியதாக சொல்லவில்லை என்றால் ஆமாம். ஒன்றாவது பிரதிவாதி தான் மேற்படி ஹாலோ பிளாக் சுவரை கட்டியதாக எதிர் வழக்குரையில் கூறியுள்ளார் என்றால் ஆமாம். அந்த இடத்தில் முன்பு மண் சுவர் இருந்ததாக குறிப்பிட்டுள்ளீர்கள், அது உங்களுக்கு பாத்தியப்பட்டதாக வழக்குரையில் சொல்லவில்லை என்றால் அது எங்களுக்கு பாத்தியப்பட்டது தான். நிரூபண வாக்குமூலத்தில் நீங்கள் மேற்படி மண் சுவர் ஒன்றாவது பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என கூறியுள்ளீர்கள் என்றால் இல்லை. மண் சுவர் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட மூன்றாவது அட்டவணை சொத்தில் தான் இருந்தது என்றால் சரியல்ல. மண் சுவர் இருந்த இடத்தில்தான் ஹாலோ

பிளாக் செங்கல் வைத்து சுவர் கட்டப்பட்டுள்ளது என்றால் ஆமாம். ஒன்றாவது பிரதிவாதி வீடு கட்டி உள்ள இடத்தில் அவர் வாங்குவதற்கு முன்பு கூரை வீடு இருந்தது. மேற்படி கூரை வீட்டுக்கான சுவர்தான் மண் சுவர் என்றால் இல்லை என்னுடைய இடத்திற்கு பாத்தியப்பட்ட சுவர் தான் அந்த மண்சுவர்.

7. பொதுவாக மண் சுவர் கட்டுபவர்கள் அந்த சுவர் நனையாமல் இருப்பதற்காக ஒன்றை அடி அளவில் கூரையை இறக்கி விடுவார்கள் என்றால் ஆமாம். அவ்வாறு அதில் இறக்கவில்லை. வா.சா.ஆ.5 வரைபடத்தில் E மற்றும் D புள்ளிக்கு தெற்கு பக்கம் ஓடு போட்ட வீடு உள்ளது என்றால் அது தற்போது உள்ளது. மேற்படி வீடு எனது மகன் கிரயம் வாங்குவதற்கு ஒரு பத்து வருடத்திற்கு முன்பு ஓடு போடப்பட்டது. அதற்கு முன்பு அது கூரை வீடாக இருந்தது. நான் பிறப்பதற்கு முன்பு அது கூரை வீடாக இருந்தது. மேற்படி வீடும், மூன்றாவது தபசில் சொத்தில் உள்ள கூரை வீடும் ஒரே மேற்கூரையாக தான் இருந்தது என்றால் ஆமாம். மேற்படி தற்போது ஓட்டு வீடாக உள்ள வீட்டில் சுவருக்கு வெளியே வடபக்கத்தில் ஒன்றையடி ஓடு நீட்டி விடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். மேற்படி ஓடி வெளியே நீட்டி விடப்பட்டுள்ளது. பழைய கூரை எந்த அளவு போட்டார்களோ அதே அளவு தான் போடப்பட்டுள்ளது என்றால் ஆமாம்.

8. மேற்படி வீட்டில் வடக்கு பக்கம் மண் சுவரும், மூன்றாவது தபசில் இருந்த மண் வீட்டின் மண் சுவரும் ஒரே சுவராக வடக்கு பக்கம் கிழமேலாக இருந்தது என்றால் ஆமாம். அதேபோன்றுதான் தற்போதும் ஒன்றாவது பிரதிவாதி ஹாலோ பிளாக் இடத்தை பராமரிப்பதற்காக அதன் வடபுறம் தென் வடலாக ஒன்றரை அடி இடத்தை போட்டுள்ளார் என்றால் சரியல்ல. அவர் அவ்வாறு சொல்கிறார். ஆனால், நாங்கள் தற்போது அளக்கும் போது அப்படி இல்லை. மேற்படி விபரங்கள் சர்வேயர் மூலம் அளந்தால் தெரியும் என்றால் தற்போது அளந்து பார்த்து ஆகிவிட்டது. தற்போது நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து அளவீடு செய்தால் தெரிந்துவிடும் என்பதால், தான் நீங்கள் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

9. இந்த வழக்கு தாக்கல் செய்த பின்னர் 15.11.2019 ஆம் தேதி ஒன்றாவது அட்டவணை, ஒன்றாவது சொத்தின் வடக்கு பக்கம் ஒரு செண்ட் இடத்தை உங்கள் மகன் முருகேசனுக்கு நன்கொடையாக கொடுத்துள்ளீர்கள் என்றால் ஆமாம். அவருக்கு உரிமை படுத்தி கொடுத்து விட்டேன். அதே தேதியில் தென் பக்கம் உள்ள இடத்தை உங்கள் மகன் முத்துக்குமாரசாமிக்கு உரிமைப்படுத்தி கொடுத்து விட்டீர்கள் என்றால் ஆமாம். அதுவும் ஒரு செண்ட் இடம் தான். மேற்படி விபரத்தை நிரூபண

வாக்குமூலத்தில் சொல்லவில்லை. மேற்படி இரண்டு ஆவணங்களிலும் இரண்டாவது தபசில் சொத்தை குறிப்பிடவில்லை. நீங்கள் பொய்யான தகவல்களுடன் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றும், அதனால், பிரதிவாதி கேட்டுள்ள செலவு தொகையுடன் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

(**இரண்டாவது மற்றும் மூன்றாவது பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய யாரும் நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை. எனவே, இரண்டாவது, மூன்றாவது பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை என முடித்து வைக்கப்படுகிறது.**)

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

SUNIL RAJA MAHALINGAM
Digitally signed by SUNIL RAJA MAHALINGAM
Date: 2024.10.16 11:26:43 +0530

District Munsif cum Judicial Magistrate,
Shenkottai